**செய்தி வெளியீடு எண்: 356** **நாள்: 04.06.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.6.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான 20 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பட்டியல் எழுத்தர், அலுவலக உதவியாளர், எடையாளர் மற்றும் காவலர் பணியிடங்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 2 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள். மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடிக் கொள்முதல் நிலையங்களில் பருவகால பட்டியல் எழுத்தர்கள் மற்றும் உதவுபவர்களாக பணிபுரிந்த 488 பணியாளர்களுக்கு பட்டியல் எழுத்தர் பணியிடத்திற்கான நிரந்தர பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

அரசு பணியில் பணிபுரிந்து பணியின்போது காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பட்டியல் எழுத்தர், அலுவலக உதவியாளர், எடையாளர், காவலாளர் பணியிடங்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் வகையில், 13 நபர்களுக்கு பட்டியல் எழுத்தர் பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளையும், 7 நபர்களுக்கு அலுவலக உதவியாளர், எடையாளர் மற்றும் காவலர் பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளையும், என மொத்தம் 20 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 2 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கரூர், விழுப்புரம், பெரம்பலூர்

ஆகிய மண்டலங்களில் நேரடிக் கொள்முதல் நிலையங்களில் பருவகால பட்டியல் எழுத்தர் மற்றும் உதவுபவர்களாக பணிபுரிந்து வரும் 488 பணியாளர்களுக்கு நிரந்தர காலிப்பணியிடங்களான பட்டியல் எழுத்தர் நிலையில் (Class-III) பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.இரா. காமராஜ், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி எம். சுதா தேவி, இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை துணைச் செயலாளர் திருமதி எஸ். வளர்மதி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 4.6.2018**